भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

EXTRAORDINARY

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

Part XV Section 1

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

PUBLISHED BY AUTHORITY

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, शूक्रवार, 29 दिसम्बर, 2000/1922 सका

New Delhi, Friday, 29th December 2000/1922 Saga

புது தில்லி, வெள்ளிக்கிழமை 29, டிசம்பர் 2000/1922 சக

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டமியற்றுத் துறை)*

*புதுதில்லி, 29 டிசம்பர், 2000.*

The translation in Tamil of the Agriculturists' Loans Act, 1884 (12 of 1884), The Maternity Benefit Act, 1961 (53 of 1961), The Cinematograph Act, 1952 (37/1952) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

உழவர் கடன்கள் சட்டம், 1884 (12/1884), பேறுகால நலப்பயன் சட்டம், 1961 (53/1961), திரைப்படச் சட்டம், 1952 (37/1952) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன்பிரிவு 2இன் கூறு (அ) வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 17.00

# திரைப்படச் சட்டம் 1952

(சட்ட எண் 37/1952)

[1952, மார்ச்சு 21]

திரைப்படங்கள் மூலமான திரைப்படக் காட்சிக்கான திரைப்படச் சுருளைக் காட்டுவதற்கான உறுதிச்சான்றளித்தலுக்கும், காட்சிகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

## பகுதி I

### முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், திரைப்படச் சட்டம், 1952 என்று வழங்கப்பெறும்.

(2) பகுதிகள் I, II, IV ஆகியவை இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும், மற்றும் பகுதி III, ஒன்றியத்து ஆட்சி நிலவரைகளில் மட்டும் அளாவி நிற்கும்.

(3) இந்தச் சட்டம், மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்:

வரம்புரையாக: பகுதிகள் I மற்றும் II, திரைப்படச் (திருத்தம்) சட்டம், 1973 இன் தொடக்கநிலைக்குப் பின்பு, மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியிலிருந்து மட்டுமே ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின்தேவை வேறானாலன்றி,—

(அ) "வயதுவந்தோர்" என்பது, தம்முடைய பதினெட்டாவது வயது நிறைவடைந்துள்ளவர் என்று பொருள்படும்;

(ஆ) "குழுமம்" என்பது, பிரிவு 3இன்படி மைய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட, திரைப்பட உறுதிச்சான்றளித்தல் குழுமம் என்று பொருள்படும்;

(ஆஆ) "உறுதிச்சான்று" என்பது, பிரிவு 5(அ) இன்படி குழுமத்தால் வழங்கப்பட்ட உறுதிச்சான்று என்று பொருள்படும்;

(இ) "திரைப்படம்" என்பது, இயங்கும் படங்களை அல்லது படங்களின் தொகுதிகளைக் காட்டுவதற்கான கருவி எதையும் உள்ளடக்கும்;

(ஈ) "மாவட்டக் குற்றவியல்நடுவர்" என்பது, மாகாணத் தலைநகர் தொடர்பாக, காவல் துறை ஆணையர் என்றுபொருள்படும்;

(ஈஈ) "திரைப்படச்சுருள்" என்பது, திரைப்படக் காட்சிக்கான திரைப்படச் சுருள் என்று பொருள்படும்;

(உ) "இடம்" என்பது வீடு, கட்டடம், கூடாரம், மற்றும் கடல் வழியானாலும், நில வழியானாலும் அல்லது வான் வழியானாலும் எந்த வகையினதுமான போக்குவரத்தையும் உள்ளடக்கும்;

(ஊ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி, வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(எ) "மண்டல அலுவலர்" என்பது, பிரிவு 5இன்படி மைய அரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட ஒரு மண்டல அலுவலர் என்று பொருள்படும் மற்றும் ஒரு கூடுதல் மண்டல அலுவலரையும் ஓர் உதவி மண்டல அலுவலரையும் உள்ளடக்கும்;

(ஏ) "தீர்ப்பாயம்" என்பது, பிரிவு 5(ஈ)இன்படி அமைக்கப்பட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் என்றுபொருள்படும்.

2. (அ) ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் செல்லாற்றலில்லாத சட்டம் எதையும் அல்லது அங்கு இருந்துவராத பதவியாளர் எவரையும் பொறுத்த, இந்தச் சட்டத்தின் சுட்டுகை எதுவும், அந்த மாநிலம் தொடர்பாக, அந்த மாநிலத்தில் செல்லாற்றலிலுள்ள நேரிணையான சட்டத்தில் அல்லது இருந்துவரும் நேரிணையான பதவியாளர் பொறுத்த சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் செல்லாற்ற லில்லாத சட்டம் எதையும் அல்லது அங்கு இருந்துவராத பதவியாளர் எவரையும் பொறுத்த சுட்டுகையாகப் பொருள் கொள்ளுதல்.

## பகுதி II

### பொதுமக்களுக்குத் திரையிட்டுக்காட்டுவதற்கான திரைப்படங்களுக்கு உறுதிச்சான்று

3. (1) பொதுமக்களுக்குத் திரையிடுவதற்கான திரைப்படங்களுக்கு ஒப்பளிக்கும் நோக்கத்திற்காக, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, திரைப்பட உறுதிச்சான்றளித்தல் குழுமம் என்று வழங்கப்பெறும் குழுமம் ஒன்றை அமைக்கலாம்; அது, மையஅரசாங்கத்தால் அமர்த்தப்பட்ட தலைவர் ஒருவரையும், பன்னிரெண்டிற்குக் குறையாத, ஆனால் இருபத்தைந்திற்கு மேற்படாத பிற உறுப்பினர்களையும் கொண்டதாக இருக்கும்.

திரைப்படத் தணிக்கையாளர் குழுமம்.

(2) குழுமத்தின் தலைவர், மைய அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படலாகும் வரையூதியத்தையும் படித்தொகைகளையும் பெறுவார், மற்றும் பிற உறுப்பினர்கள், குழுமத்தின் கூட்டங்களுக்கு வருவதற்கு வகுத்துரைக்கப்படலாகும் படித் தொகைகளையும் கட்டணங்களையும் பெறுவர்.

(3) குழும உறுப்பினர்களின் பணியின் பிற வரையுரைகளும் வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருக்கும்.

4. (1) திரைப்படம் எதையும் திரையிடுவதற்கு விரும்புகிற ஆள் எவரும், அதனைப் பொறுத்த உறுதிச்சான்றுக்காக, குழுமத்திற்கு வகுத்துரைக்கப்பட்ட முறையில் விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும், மற்றும் குழுமம், வகுத்துரைக்கப்பட்ட முறையில் திரைப்படத்தை ஆய்வுசெய்த பின்பு அல்லது ஆய்வு செய்யப்பட்ட பின்பு,—

திரைப் படங்களை ஆய்வு செய்தல்

(i) வரையறைக்குட்படாத பொதுமக்களுக்குத் திரையிடுவதற்கான திரைப்படத்திற்கு ஒப்பளிக்கலாம்:

வரம்புரையாக: திரைப்படத்திலுள்ள பொருள் எதனையும் கருத்திற் கொண்டு, பன்னிரெண்டு வயதுக்குக் குறைவான குழந்தை எதுவும், அத்தகைய திரைப்படத்தைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படலாமா என்பது அத்தகைய பெற்றோர்களாலோ அல்லது பாதுகாவலர்களாலோ ஓர்வு செய்யப்படவேண்டுமா என்பது பற்றிய வினாவிற்கு எச்சரிக்கை செய்வது தேவை என்று குழுமம் கருதுமாயின், குழுமம், அந்தத் திரைப்படத்தை வரையறைக்கு உட்படாத பொதுமக்களுக்குத் திரையிடுவதற்காக, அந்தப்படிக்கு ஒரு மேற்குறிப்புடன் ஒப்பளிக்கலாம்; அல்லது

(ii) வயது வந்தவர்களுக்கு மட்டும் என்று வரையறைக்கு உட்பட்டு பொதுமக்களுக்குத் திரையிடுவதற்கான திரைப்படத்திற்கு ஒப்பளிக்கலாம்; அல்லது

(iiஅ) அந்தத் திரைப்படத்தை அதன் தன்மை, உள்ளடக்கம், கருத்து இவற்றைக் கவனத்திற்குகொண்டு விழைதொழில் எதனின் உறுப்பினர்களுக்கு அல்லது ஆட்களின் வகையினர் எவருக்கும் என்ற வரையறைக்கு உட்பட்டு பொதுமக்களுக்குத் திரையிடுவதற்கான திரைப்படத்திற்கு ஒப்பளிக்கலாம்; அல்லது

(iii) மேலே கண்ட கூறுகளில் எதன்படியும் பொதுமக்களுக்குத் திரையிடுவதற்கான திரைப்படத்திற்கு ஒப்பளிப்பதற்கு முன்பு, திரைப்படத்தில் தாம் தக்கதெனக் கருதும் வெட்டியெடுத்தல்களை அல்லது மாற்றமைவுகளை செய்து கொண்டுவரும்படி விண்ணப்பதாரரைப்பணிக்கலாம்; அல்லது

(iv) பொதுமக்களுக்குத் திரையிடுவதற்கான திரைப்படத்திற்கு ஒப்பளிக்க மறுக்கலாம்.

(2) அந்தப் பொருட்பாட்டில் தமது கருத்துரைகளைப் புகல்வதற்கான வாய்ப்பினை விண்ணப்பதாரருக்கு நல்கிய பின்பு தவிர, உட்பிரிவு (1)இன் கூறு (i), கூறு (ii), கூறு (iiஅ), கூறு (iii) அல்லது கூறு (iv) இன் வரம்புரையின்படி நடவடிக்கை எதுவும், குழுமத்தால் எடுக்கப்படுதல் ஆகாது.

அறிவுரை ஆயங்கள்.

5. (1) இந்தச் சட்டத்தின்படி தனது செயற்பணிகளைத் திறம்பட ஆற்றுவதற்குக் குழுமத்தை இயல்விக்கும் நோக்கத்திற்காக, மைய அரசாங்கம், தான் தக்கதெனக் கருதும் மண்டல மையங்களில் அறிவுரைஆயங்களை நிறுவலாம். மைய அரசாங்கத்தின் கருத்தில் அது ஒவ்வொன்றும், மக்களிடத்தில் திரைப்படங்களை ஏற்படுத்தும் விளைவைப்பற்றி முடிவுசெய்வதற்குத் தகுதிப்பாடுடைய ஆட்களாக மைய அரசாங்கம் அமர்த்துவதற்குத் தக்கதெனக் கருதலாகும் எண்ணிக்கையில் கொண்டதாக இருக்கும்.

(2) மண்டல மையம் ஒவ்வொன்றிலும், மைய அரசாங்கம் அமர்த்துவதற்குத் தக்கதெனக் கருதலாகும் அத்தனை மண்டல அலுவலர்கள் இருப்பர்; மற்றும் இதன் பொருட்டு செய்யப்பட்ட விதிகள், திரைப்படங்களை ஆய்வு செய்வதில் மண்டல அலுவலர்கள் ஒன்று சேருவதற்கு வகை செய்யலாம்.

(3) குழுமம், எந்த திரைப்படத்திற்கான உறுதிச்சான்றிற்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த திரைப்படம் எதனையும் பொறுத்து, வகுத்துரைக்கப்படலாகும் முறையில் அறிவுரைஆயம் எதனையும் கலந்தாய்வு செய்யலாம்.

(4) திரைப்படங்களை ஆய்வு செய்வதற்கும், அது தக்கதெனக் கருதும் பரிந்துரைகளைக் குழுமத்திற்குச் செய்வதற்கும் இதன்பொருட்டு செய்யப்பட்ட விதிகளில் வகை செய்யப்படலாகிறவாறு, மன்றமாக அல்லது குழுவாகச் செயற்படுவது அத்தகைய அறிவுரைஆயத்தின் கடைமையாகும்.

(5) அறிவுரைஆயத்தின் உறுப்பினர்கள், வரையூதியம் எதற்கும் உரிமை கொண்டவர் ஆகார், ஆனால், வகுத்துரைக்கப்படலாகும் கட்டணங்கள் அல்லது படித்தொகைகளைப் பெறுவர்.

திரைப் படங்களுக்கு உறுதிச் சான்றளித்தல்.

5. அ (1) வகுத்துரைக்கப்பட்ட முறையில் திரைப்படத்தை ஆய்வு செய்த பின்பு அல்லது அது ஆய்வு செய்யப்பட்டதும், குழுமம்,—

(அ) அந்தத் திரைப்படம், வரையறைக்குட்படாத பொதுமக்களின் காட்சிக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, பிரிவு 4இன் உட்பிரிவு (1)இன் கூறு (i) இல் இதற்கான வரம்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தன்மையுதான மேற்குறிப்புடன் வரையறைக்குட்படாத பொதுமக்களின் காட்சிக்குத் தகுந்ததாக இருக்கிறது என்று குழுமம் கருதுமாயின், அந்தத் திரைப்படம் பொறுத்து உறுதிச்சான்றிற்காக விண்ணப்பிக்கும் ஆளுக்கு "யூ" உறுதிச்சான்று அல்லது, நேர்வுக்கேற்ப, "யூஏ" உறுதிச்சான்று வழங்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) அந்தத் திரைப்படம், வரையறைக்குட்படாத பொதுமக்களின் காட்சிக்குத் தகுந்ததாக இல்லாமல் இருக்கிறது ஆனால் வயது வந்தோர்க்கு மட்டும் என்ற வரையறைக்குட்பட்டு பொதுமக்களின் காட்சிக்குத் தகுந்ததாக இருக்கிறது அல்லது, நேர்வுக்கேற்ப, விழைதொழில் எதனின் உறுப்பினர்களுக்கு அல்லது ஆட்களின் வகையினர் எவருக்கும் என்ற வரையறைக்குட்பட்ட பொதுமக்களின் காட்சிக்குத் தகுந்ததாக இருக்கிறது என்று குழுமம் கருதுமாயின், அந்தத்

திரைப்படம் பொறுத்த உறுதிச்சான்றிற்காக விண்ணப்பிக்கும் ஆளுக்கு அது "எ" உறுதிச்சான்று அல்லது, நேர்வுக்கேற்ப, "எஸ்" உறுதிச்சான்று வழங்குதல் வேண்டும்;

மற்றும் வகுத்துரைக்கப்பட்ட முறையில் அவ்வாறு குறியிடப்படுமாறு செய்தல் வேண்டும்:

வரம்புரையாக: திரைப்படத்திலுள்ள உரிமைகள் எவருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த உறுதிச்சான்றுக்கான விண்ணப்பதாரர், வெளியிடுநர் அல்லது திரையிடுநர் எவரும் அல்லது பிற ஆள் எவரும், கூறு (அ) அல்லது கூறு (ஆ) இன்படி எந்தத் திரைப்படத்திற்கு உறுதிச்சான்று வழங்கப்பட்டுள்ளதோ, அந்தத் திரைப்படத்தில் அடங்கியுள்ள பொருட்பாடு எதனையும் பொறுத்தும், ஆபாசக் காட்சிதொடர்பான சட்டம் எதன்படியும் தண்டனைக்கு உள்ளாகமாட்டார்.

(2) திரைப்படம் எதனையும் பொறுத்து வழங்கப்பட்ட ஓர் உறுதிச்சான்று அல்லது உறுதிச்சான்றை வழங்க மறுக்கும் ஆணை ஒன்று, இந்திய அரசிதழில் வெள்யிடப்படுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள பிற வகையங்களுக்கு உட்பட்டு, இந்தப்பிரிவின்படி குழுமத்தால் வழங்கப்பட்ட உறுதிச்சான்று, இந்தியா எங்கும் பத்தாண்டுக்கால அளவிற்குச் செல்லுந்தன்மையுடையது ஆகும்.

திரைப்படங்களுக்கு உறுதிச் சான்றளிப்பதில் வழிகாட்டுவதற்கான நெறிகள்.

5(ஆ). (1) உறுதிச்சான்று அளிப்பதற்கு தகுதிறமுள்ள அதிகார அமைப்பு, திரைப்படம் அல்லது அதன் பகுதி எதுவும், இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு அரசின் பாதுகாப்பு, அயல்நாடுகளுடனான நட்புறவு, பொது ஒழுங்கமைதி, பண்பு நலம் அல்லது ஒழுக்க நெறி இவைகளின் நலன்களுக்கு எதிராக இருக்கிறது அல்லது அவதூறு அல்லது நீதிமன்ற அவமதிப்பை உள்ளடக்கியிருக்கிறது அல்லது பெரும்பாலும் குற்றச்செயல் எதையும் செய்வதற்குத் தூண்டி விடுவதாக இருக்கிறது என்று கருதுமாயின், திரைப்படம் ஒன்று பொதுமக்கள் காட்சிக்கு என உறுதிச்சான்றளிக்கப்படுதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, மைய அரசாங்கம், பொதுமக்கள் காட்சிக்கான திரைப்படங்களுக்கு ஒப்பளிக்கையில், இந்தச் சட்டத்தின்படி உறுதிச்சான்று வழங்குவதற்குத் தகுதிறமுள்ள அதிகார அமைப்பிற்கு வழிகாட்ட வேண்டிய நெறிகளை விவரிப்பதற்கு, அது தக்கதெனக் கருதும் பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம்.

மேல்முறையீடுகள்.

5 (இ) (1) திரைப்படம் பொறுத்த உறுதிச்சான்றுக்காக விண்ணப்பம் செய்கிற மற்றும்—

(அ) உறுதிச்சான்றை வழங்குவதற்கு மறுக்கிற, அல்லது

(ஆ) "எ" உறுதிச்சான்றை மட்டுமே வழங்குகிற, அல்லது

(இ) "எஸ்" உறுதிச்சான்றை மட்டுமே வழங்குகிற, அல்லது

(ஈ) "யூஎ" உறுதிசான்றை மட்டுமே வழங்குகிற, அல்லது

(உ) வெட்டி எடுத்தல்கள் அல்லது மாற்றங்கள் எவற்றையும் செய்வதற்கு விண்ணப்பதாரரைப் பணிக்கிற

குழுமத்தின் ஆணையினால் குறையுற்ற ஆள் எவரும், அத்தகைய ஆணைத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு ஒன்றைச் செய்யலாம்:

வரம்புரையாக: மேல்முறையீட்டாளர், மேற்சொன்ன முப்பதுநாள் கால அளவிற்குள் மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதிலிருந்து போதிய காரணத்தால் தடுக்கப்பட்டார் என்று தீர்ப்பாயம் தெளிவுறக் காணுமாயின், அது, அத்தகைய மேல்முறையீட்டை மேலுமொரு முப்பதுநாள் கால அளவிற்குள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு அனுமதிக்கலாம்.

(2) இந்தப் பிரிவின்படியான மேல்முறையீடு ஒவ்வொன்றும், எழுத்து வடிவிலான மனுவின் மூலமாகச் செய்யப்படுதல் வேண்டும். மற்றும் அத்தகைய விவரவுரை மேல்முறையீட்டாளருக்கு அளிக்கப்பட்டிருக்குமிடத்து, எதிராக மேல் முறையீடு செய்யப்பட்ட ஆணைக்கான காரணங்களின் சுருக்க விவரவுரையுடனும், வகுத்துரைக்கப்படலாகும் ஓராயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணங்களுடனும் சேர்ந்துபோதல் வேண்டும்.

மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தை அமைத்தல்.

5 (ஏ) (1) பிரிவு 5 (இ) இன்படி குழுமத்தின் ஆணை எதற்கும் எதிரான மேல்முறையீடுகளை விசாரிக்கும் நோக்கத்திற்காக, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ஒன்றினை அமைத்தல் வேண்டும்.

(2) தீர்ப்பாயத்தின் தலைமை அலுவலகம், புதுதில்லியில் அல்லது மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கும் பிற இடத்தில் இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய தீர்ப்பாயம், மைய அரசாங்கத்தால் அமர்த்தப்படும் ஒரு தலைவரையும் நான்கிற்கு மேற்படாத பிற உறுப்பினர்களையும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(4) ஒருவர், அவர் உயர்நீதிமன்றம் ஒன்றின் ஓய்வுபெற்ற நீதிபதியாகவோ அல்லது உயர்நீதிமன்றம் ஒன்றின் நீதிபதியாக இருப்பதற்குத் தகுதிப்பாடுடைய ஒருவராகவோ இருந்தாலன்றி, தீர்ப்பாயத்தின் தலைவராக அமர்த்தப்படுவதற்கு தகுதிப்பாடு உடையவர் ஆகார்.

(5) மைய அரசாங்கம், தன் கருத்தில் எவர்கள் பொதுமக்களிடத்தில் திரைப்படம் ஏற்படுத்தும் விளைவை முடிவுசெய்வதற்குத் தகுதிப்பாடு உடையவர்களாக இருக்கின்றனரோ, அவர்களைத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களாக இருப்பதற்கு அமர்த்தலாம்.

(6) தீர்ப்பாயத்தின் தலைவர், மைய அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படலாகும் வரையூதியத்தையும் படித்தொகைகளையும் பெறுவார். மற்றும் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படலாகும் படித்தொகைகளையும் கட்டணங்களையும் பெறுவர்.

(7) இதன்பொருட்டு செய்யப்படலாகும் விதிகளுக்கு உட்பட்டு, மைய அரசாங்கம், இந்தச் சட்டத்தின்படி தீர்ப்பாயத்தின் செயற்பணிகளைத் திறம்பட புரிவதற்காக ஒரு செயலாளரையும், தான் தேவையெனக் கருதலாகும் பிற பணி புரிவோரையும் அமர்த்தலாம்.

(8) தீர்ப்பாயத்தின் செயலாளரும், பிற பணிபுரிவோரும் தீர்ப்பாயத்தின் தலைவருடன் கலந்தாய்வு செய்தபின்பு, வகுத்துரைக்கப்படலாகும் அதிகாரங்களைச் செலுத்துதலும், கடமைகளைப் புரிதலும் வேண்டும்.

(9) தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் மற்றும் அதன் செயலாளரின் மற்றும் பிற பணிபுரிவோரின் பிற பணிவரையுரைகளும், வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படலாகுமாறு இருத்தல் வேண்டும்.

(10) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, தீர்ப்பாயம் தம் சொந்த நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்தலாம்.

(11) தீர்ப்பாயம், பொருட்பாட்டில் தான் தேவையெனக் கருதும் விசாரணையை செய்த பின்பு மற்றும் பொருட்பாட்டில் கேட்கப்படுவதற்கான ஒரு வாய்ப்பினை மேல்முறையீட்டாளருக்கும் குழுமத்திற்கும் நல்கிய பின்பு, திரைப்படம் ஒன்று பொறுத்து, தான் தக்கதெனக் கருதும் ஆணையை இடலாம் மற்றும் குழுமம் அத்தகைய ஆணைக்கு இணங்க பொருட்பாட்டை முடிவுசெய்தல் வேண்டும்.

உறுதிச் சான்றினை தற்காலிகமாக நிறுத்தி வைத்தலும் முறித்தறவு செய்தலும்.

5 (உ). (1) பிரிவு 6இன் உட்பிரிவு (2)இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், மைய அரசாங்கம், இந்தப் பகுதியின்படி வழங்கப்பட்ட உறுதிச்சான்றினை—

(i) எந்தத் திரைப்படம் பொறுத்து உறுதிச்சான்று வழங்கப்பட்டதோ அந்தத் திரைப்படம், எந்த வடிவத்தில் உறுதிச்சான்றளிக்கப்பட்டதோ அது அல்லாத பிற வடிவத்தில் திரையிட்டுக்காட்டப் பட்டது என்று, அல்லது

(ii) அந்தத் திரைப்படம் அல்லது அதன் பகுதி எதுவும், இந்தப் பகுதியின் வகையங்களை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளை மீறி திரையிட்டுக் காட்டப்பட்டது என்று

தெளிவுறக் காணுமாயின், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகத் தான் தக்கதெனக் கருதும் கால அளவிற்கு தற்காலிகமாக நிறுத்திவைக்கலாம் அல்லது உறுதிச்சான்றினை முறித்தறவு செய்யலாம்.

(2) உட்பிரிவு (1)இன் படி அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்குமிடத்து மைய அரசாங்கம், உறுதிச்சான்றுக்காக விண்ணப்பித்துள்ளவரையோ அல்லது படச்சுருளிலுள்ள உரிமைகள் எவருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளனவோ அந்த பிற எவரையுமோ அல்லது அவர்களிருவரையுமோ, படச்சுருள் பொறுத்து வழங்கப்பட்ட உறுதிச்சான்றையும் இரட்டிப்புப்படி சான்றுகள் எவையேனுமிருப்பின், அவற்றையும் குழுமத்திடமோ அல்லது மேற்சொன்ன அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டவர் அல்லது அதிகாரி எவரிடமோ ஒப்புவிக்கும்படி கோரலாம்.

(3) இந்தச் சட்டத்தின்படியான நடவடிக்கை எதுவும், பொருட்பாட்டில் தன் கருத்துரைகளை புகல்வதற்குத் தொடர்புடையவருக்கு வாய்ப்பு ஒன்றினை நல்கிய பின்பு அல்லாமல், எடுக்கப்படுதலாகாது.

(4) எந்தக் கால அளவின்போது உறுதிச்சான்று ஒன்று, இந்தப் பிரிவின்படி தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவின்போது, படச்சுருளானது, உறுதிச்சான்றளிக்கப்படாத படச்சுருள் ஒன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

5 (ஊ) (1) உறுதிச்சான்றிற்கான விண்ணப்பதாரர் ஒருவர் அல்லது திரைப்படத்திலுள்ள உரிமைகள் எவருக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த பிற ஆள் எவரும், பிரிவு 5(உ) வின்படியான மைய அரசாங்கத்தின் ஆணை எதனாலும் குறையுற்றிருக்குமிடத்து, அவர் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கையின் வெளியீட்டுத் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், ஆணையை மறு ஆய்வு செய்வதற்கு, மைய அரசாங்கத்திற்கு, எந்தக் காரணங்களின்பேரில் அவர் மறு ஆய்வு செய்யப்படுவது தேவையென கருதுகிறாரோ அந்தக் காரணங்களை அத்தகைய விண்ணப்பத்தில் விவரித்து, விண்ணப்பம் ஒன்று செய்யலாம்: (மைய அரசாங்கத்தால் ஆணைகள் மறு ஆய்வு செய்யப்படுதல்)

வரம்புரையாக: மைய அரசாங்கம், உறுதிச்சான்றிற்கான விண்ணப்பதாரர் அல்லது பிற ஆள், மறு ஆய்வுக்கான விண்ணப்பத்தின் மேற்சொன்ன அறுபது நாட்கள் காலஅளவிற்குள், முன்னிடுவதிலிருந்து போதிய காரணத்தால் தடுக்கப்பட்டார் என்று தெளிவுறக் காணுமாயின், அத்தகைய விண்ணப்பத்தை, மேலுமான அறுபது நாட்கள் கால அளவிற்குள் முன்னிடுவதற்கு அனுமதிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி விண்ணப்பத்தைப் பெற்றதன் பேரில், மைய அரசாங்கம், குறையுற்றவருக்குக் கேட்கப்படுவதற்குத் தகுமான வாய்ப்பு ஒன்று நல்கிய பின்பும், தான் தேவையென்று கருதலாகும் மேலுமான விசாரணையைச் செய்த பின்பும், தான் தக்கதெனக் கருதும், தன்முடிவை உறுதி செய்யும், மாற்றமைவு செய்யும், அல்லது எதிர்மாறாக்கும் ஆணையைப் பிறப்பிக்கலாம் மற்றும் குழுமம், அத்தகைய ஆணைக்கு இணங்க அந்தப் பொருட்பாட்டை முடிவு செய்தல் வேண்டும்.

மைய அரசாங்கத்திற்குள்ள சீராய்வு அதிகாரங்கள்.

6. (1) இந்தப்பகுதியில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், மைய அரசாங்கம், எந்தக் கட்டத்திலும், தானே முன்வந்து, குழுமத்தின் முன்பு முடிவுறா நிலையிலிருக்கும் அல்லது அதனால் முடிவு செய்யப்பட்டிருக்கும் அல்லது, நேர்வுக்கேற்ப, தீர்ப்பாயத்தால் முடிவு செய்யப்பட்ட (ஆனால், தீர்ப்பாயத்தின் முன்பு முடிவுறா நிலையிலிருக்கும் பொருட்பாடு எதனையும் பொறுத்த நடவடிக்கை எதுவும் உள்ளடங்கலாக) திரைப்படம் எதன் தொடர்பான நடவடிக்கை எதனின் பதிவணங்களைத் தருவித்து தாம் தேவையெனக் கருதும் பொருட்பாட்டில் அத்தகைய விசாரணையைச் செய்த பின்பு, அது தொடர்பாகத் தாம் தக்கதெனக் கருதும் ஆணையை இடலாம். மற்றும் குழுமம், அத்தகைய ஆணைக்கு இணங்க அந்தப் பொருட்பாட்டை முடிவு செய்தல் வேண்டும்:

வரம்புரையாக: அவருக்கு பொருட்பாட்டில் தம் கருத்துரைகளை புகல்வதற்கு வாய்ப்பு ஒன்றை நல்கிய பின்பு அல்லாமல், உறுதிச் சான்றிற்காக விண்ணப்பிக்கும் ஆள் எவருக்கும் அல்லது, நேர்வுக்கேற்ப, எவருக்கு உறுதிச்சான்று வழங்கப்பட்டிருக்கிறதோ அவருக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் பாதிக்கும் ஆணை எதுவும் இடப்படுதல் ஆகாது:

மேலும் வரம்புரையாக: இந்த உட்பிரிவிலுள்ள எதுவும், மைய அரசாங்கத்தை, எந்தப் பொருண்மையினை வெளிக்கொணர்வது பொது நலனுக்கு எதிரானது என்று அது கருதுகிறதோ அந்தப் பொருண்மை எதனையும் வெளிக்கொணரும்படி வேண்டுறுத்தப்படுதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1)இன்படி வழங்கப்பட்ட அதிகாரங்களுக்குக் குந்தகமின்றி, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக—

(அ) உறுதிச் சான்று வழங்கப்பட்டுள்ள திரைப்படம், இந்தியா முழுவதிலும் அல்லது அதன் பகுதி எதிலும், உறுதிச்சான்று அளிக்கப்படாத திரைப்படமாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம்; அல்லது

(ஆ) "யூ" உறுதிச் சான்று அல்லது "யூஏ" உறுதிச்சான்று அல்லது "எஸ்" உறுதிச்சான்று வழங்கப்பட்டுள்ள திரைப்படம், பொறுத்து, "ஏ" உறுதிச்சான்று வழங்கப்பட்டுள்ள திரைப்படமாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்று பணிக்கலாம்; அல்லது

(இ) பணிப்புரையில் குறித்துரைக்கப்படலாகும் கால அளவிற்கு திரைப்படம் எதுவும் திரையிட்டுக் காட்டப்படுவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படவேண்டுமென்று பணிக்கலாம்:

வரம்புரையாக: கூறு (இ) இன்படி பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் அறிவிக்கைத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குமேல் செல்லாற்றலில் இருத்தல் ஆகாது.

(3) உட்பிரிவு (2)இன்கூறு (அ) அல்லது கூறு (இ) இன்படியான நடவடிக்கை எதுவும், பொருட்பாட்டில் தம் கருத்துரைகளைப் புகல்வதற்குத் தொடர்புடைய ஆளுக்கு வாய்ப்பு ஒன்று நல்கிய பின்பு அல்லாமல், எடுக்கப்படுதல் ஆகாது.

(4) உட்பிரிவு (2)இன் கூறு (இ)இன்படி திரைப்படம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட கால அளவின்போது, அந்தத் திரைப்படம், உறுதிச்சான்றளிக்கப்படாத திரைப்படமாக கொள்ளப்படுதல் வேண்டும்.

உறுதிச் சான்றளிக்கப்பட்ட திரைப் படங்கள் பொறுத்து வெளியிடுபவர்களுக்கு திரையிடுபவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய தகவலும் ஆவணங்களும்.

6 அ. உறுதிச்சான்றளிக்கப்பட்ட திரைப்படம் எதனையும், வெளியிடுநர் அல்லது திரையிடுபவர் எவரிடமும் ஒப்புவிக்கிற ஆள் எவரும், வகுத்துரைக்கப்படலாகும் முறையில், தலைப்பு, திரைப்படத்தின் நீளம், அது பொறுத்து வழங்கப்பட்ட உறுதிச்சான்றின் எண் மற்றும் தன்மை மற்றும் வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்கு உட்பட்டு அவ்வாறு வழங்கப்பட்டுள்ளதோ அந்த வரைக்கட்டுகளையும், திரைப்படம் பொறுத்து வகுத்துரைக்கப்படும் பிற விவரங்கள் எவற்றையும் வெளியிடுபவருக்கு அல்லது, நேர்வுக்கேற்ப, திரையிடுபவருக்கு அறிவித்தல் வேண்டும்.

7.(1) ஆள் எவரும்—

இந்தப் பகுதியை மீறியதற்கான தண்டனை.

(அ) (i) வரையறைக்குட்படாத பொதுமக்களின் காட்சிக்கு அல்லது வயது வந்தவர்களுக்கு அல்லது விழைதொழில் எதனின் உறுப்பினர்களுக்கு அல்லது ஆட்களின் வகையினர் எவருக்கும் என்ற வரையறைக்குட்பட்ட பொதுமக்களின் காட்சிக்குத் தகுந்ததாக குழுமத்தால் உறுதிச் சான்றளிக்கப்பட்டுள்ள மற்றும் அது திரையிட்டுக் காட்டப்படுகிறபோது, குழுமத்தின் வகுத்துரைக்கப்பட்ட அடையாளக் குறியைக் காட்டுகிற மற்றும் அத்தகைய அடையாளக் குறி அதில் ஒட்டப்பட்டதிலிருந்து எந்த வழியிலும் மாற்றப்படாத அல்லது திரித்து மாற்றப்படாத திரைப்படம் அல்லாத பிற திரைப்படம் எதனையும்,

(ii) வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வரையறைக்குட்பட்ட பொது மக்களின் காட்சிக்குத் தகுந்ததாக குழுமத்தால் உறுதிச் சான்றளிக்கப்பட்ட திரைப்படம் எதனையும் வயது வராத ஆள் எவருக்கும்,

(iiஅ) விழைதொழில் அல்லது ஆட்களின் வகையினர் எவருக்கும் வரையறைக்குட்பட்ட பொதுமக்களின் காட்சிக்குத் தகுந்ததாக குழுமத்தால் உறுதிச் சான்றளிக்கப்பட்ட திரைப்படம் எதனையும், அத்தகைய விழைதொழிலின் ஓர் உறுப்பினராக இல்லாத, அல்லது அத்தகைய வகையினரின் ஓர் உறுப்பினராக இல்லாத ஆள் எவருக்கும்

இடம் எதிலும் திரையிட்டுக்காட்டுவாராயின் அல்லது திரையிட்டுக் காட்டப்படுவதற்கு அனுமதிப்பாராயின், அல்லது

(ஆ) திரைப்படத்திற்கு உறுதிச் சான்றளிக்கப்பட்ட பின்பு, சட்டப்படியான அதிகாரமில்லாமல், (மெய்ப்பிக்கும் சுமை அவர்பால் இருக்கிறது) அதை எந்த வழியிலும் மாற்றுவாராயின் அல்லது திரித்து மாற்றுவாராயின், அல்லது

(இ) பிரிவு 6(அ) வில் அடங்கியுள்ள வகையங்களுக்கு அல்லது மைய அரசாங்கத்தால் அல்லது இந்தச் சட்டத்தால் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளால் குழுமத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அல்லது செயற் பணிகளில் எதனையும் செலுத்துவதில் அதனால் இடப்பட்ட ஆணை எதற்கும் இணங்கி நடக்கத் தவறுவாராயின்,

அவர், மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத் தண்டனையோ அல்லது இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத் தண்டமோ அல்லது இரண்டுமோ மற்றும் தொடர்ச்சியான குற்றச் செயலைப் பொறுத்தவரை, அந்தக் குற்றச் செயல் தொடருகிற நாள் ஒவ்வொன்றிற்கும் இருபதாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் மேலுமான பணத்தண்டமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்:

வரம்புரையாக: கூறு (அ)இன் உட்கூறு (i)இன் வகையங்களை மீறி இடம் எதிலும் காட்சிப்படம் (Video film) ஒன்றினை திரையிட்டுக் காட்டுகிற அல்லது காட்டப்படுவதற்கு அனுமதிக்கிற ஓர் ஆள், மூன்று மாதங்களுக்குக் குறையாத, ஆனால், மூன்று ஆண்டுகள்வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவிற்கு சிறைத்தண்டனை மற்றும் இருபதாயிரம் ரூபாய்க்குக்குறையாத, ஆனால் இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டமோ மற்றும் தொடர்ச்சியான குற்றச்செயலைப் பொறுத்தவரை, அந்தக் குற்றச்செயல் தொடருகிற நாள் ஒவ்வொன்றிற்கும், இருபதாயிரம் ரூபாய்வரை நீடிக்கலாகும் மேலுமான பணத்தண்டமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்:

மேலும் வரம்புரையாக: நீதிமன்றம், தீர்ப்புரையில் குறிப்பிடப்பட வேண்டிய போதுமான மற்றும் சிறப்புக் காரணங்களுக்காக, மூன்று மாதங்களுக்குக் குறைவான

ஒரு கால அளவிற்குச் சிறைத்தண்டனையோ அல்லது இருபதாயிரம் ரூபாய்க்குக் குறைவான பணத்தண்டமோ விதிக்கலாம்:

இன்னும் வரம்புரையாக: குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம், 1973 (2/1974) இன் பிரிவு 29இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தப் பகுதியின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதற்காகவும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் எவருக்கும், ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படுகிற பணத்தண்டத்திற்காக தீர்ப்புத் தண்டனை வழங்குவது, மாநில அரசாங்கத்தால் இதன் பொருட்டு சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள பெருநகரக் குற்றவியல் நடுவர் எவருக்கும் அல்லது நீதித் துறை முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் எவருக்கும் சட்டப்படியானதாகும்:

இன்னும் கூட வரம்புரையாக: வெளியிடுபவர் அல்லது திரையிடுபவர் அல்லது திரையரங்கம் ஒன்றின் உரிமையாளர் அல்லது பணிபுரிபவர் எவரும், இந்தப் பகுதியின்படி, "யூஏ" என்று உறுதிச் சான்றளிக்கப்பட்ட திரைப்படம் ஒன்றின்மீதுள்ள எச்சரிக்கை மேற்குறிப்பின் வரைக்கட்டு எதனையும் மீறியதற்கான தண்டனைக்கு உள்ளாதல் ஆகாது.

(2) திரைப்படம் எதனையும் பொறுத்து ஆள் எவராலும் இழைக்கப்பட்ட இந்தப் பிரிவின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றிற்காக, அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவாராயின், குற்றத்தீர்ப்பளிக்கும் நீதிமன்றம், அந்தத் திரைப்படம், அரசாங்கத்திடம் தண்ட இழப்பாகச் சேர்க்கப்படுதல் வேண்டும் என்று மேலும் பணிக்கலாம்.

(3) எந்தத் திரைப்படம் பொறுத்து, "ஏ" உறுதிச்சான்று அல்லது "எஸ்" உறுதிச்சான்று அல்லது "யூஏ" உறுதிச்சான்று வழங்கப்பட்டுள்ளதோ, அந்தத் திரைப்படம் ஒன்றை தங்கள் பெற்றோர்களுடனோ அல்லது காப்பாளர்களுடனோ சேர்ந்திருக்கும் மூன்று வயதுக்குக் கீழுள்ள குழந்தைக்குத் திரையிட்டுக் காட்டுதலானது, இந்தப் பிரிவின் பொருளின்படி ஒரு குற்றச்செயலாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

கைப்பற்றுவதற்கான அதிகாரம்.

7அ. (1) எந்தத் திரைப்படம் பொறுத்து இந்தச் சட்டத்தின்படி உறுதிச் சான்று எதுவும் வழங்கப்படவில்லையோ, அந்தத் திரைப்படம் திரையிட்டுக் காட்டப்படுகிற அல்லது வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற வரையறைக்குட்பட்ட பொதுமக்களின் காட்சிக்குத் தகுந்ததாக உறுதிச்சான்றளிக்கப்பட்ட திரைப்படம், வயதுவராத ஆள் எவருக்கும் திரையிட்டுக் காட்டப்படுகிற அல்லது இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள பிற வகையங்களில் எதற்கும் மீறுகையாக அல்லது மைய அரசாங்கத்தால், தீர்ப்பாயத்தால் அல்லது குழுமத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களில் எவற்றையும் செலுத்துவதில், அதனால் இடப்பட்ட ஆணை எதனையும் மீறி திரைப்படம் திரையிட்டுக் காட்டப்படுகிறவிடத்து, காவல் அலுவலர் எவரும், திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது அல்லது திரையிடப்படுகிறது அல்லது பெரும்பாலும் திரையிடப்படவிருக்கிறது என்று அவர் நம்பக் காரணம் பெற்றுள்ள இடம் எதிலும் நுழையலாம், அதை சோதனையிடலாம், மற்றும் அந்தத் திரைப்படத்தைக் கைப்பற்றலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படியான சோதனைகள் அனைத்தும், சோதனைகள் தொடர்பான, குற்றவியல் நெறிமுறைத்தொகுப்புச் சட்டம், 1973 (2/1974)இன் வகையங்களுக்கிணங்க செய்யப்படுதல் வேண்டும்.

குழுமத்தால் அதிகாரங்கள் ஒப்படைவு செய்யப்படுதல்.

7ஆ. (1) இந்தச் சட்டத்தின்படி குழுமத்தால் செலுத்தத்தக்க அதிகாரம், அதிகார அடைவு அல்லது அதிகாரவரம்பு எதுவும், இந்தப் பகுதியின்படி திரைப்படங்களுக்கு உறுதிச்சான்றளிக்கப்படுதல் தொடர்பாக, மற்றும் ஆணையில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகள் எவையேனுமிருப்பின், அவற்றுக்கு உட்பட்டு, குழுமத்தின் தலைவரால் அல்லது பிற எவரேனும் உறுப்பினராலும் கூட செலுத்தத்தக்கதாகும் என்று மைய அரசாங்கம், பொது அல்லது சிறப்பு ஆணை வாயிலாகப் பணிக்கலாம், மற்றும் ஆணையில் குறித்துரைக்கப்பட்ட தலைவரால் அல்லது பிற உறுப்பினரால் செய்யப்பட்ட எதுவும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை, குழுமத்தால் செய்யப்பட்ட செயலாகவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மைய அரசாங்கம், ஆணை வாயிலாகவும், வகுத்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டும், தற்காலிக உறுதிச் சான்றுகள் வழங்குவதற்கு மண்டல அலுவலர்களுக்கு அதிகாரமளிக்கலாம்.

ஆய்வு செய்வதற்காக திரைப்படங்களை திரையிட்டுக் காட்டுமாறு பணிப்பதற்குள்ள அதிகாரம்.

7(இ). இந்தச் சட்டத்தால் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் எதனையும் செலுத்தும் நோக்கத்திற்காக, மைய அரசாங்கம், தீர்ப்பாயம் அல்லது குழுமம் தன் முன்பு அல்லது இதன் பொருட்டு தன்னால் குறித்துரைக்கப்பட்ட ஆள் அல்லது அதிகாரஅமைப்பு எதன் முன்பும் திரைப்படம் எதனையும் திரையிட்டுக்காட்டுமாறு கோரலாம்

காலியிடங்கள், முதலானவை நடவடிக்கையைச் செல்லா நிலையதாக்காது.

7(FF) தீர்ப்பாயத்தின், குழுமத்தின் அல்லது அறிவுரைஆயத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், நேர்வுக்கேற்ப, தீர்ப்பாயத்தின், குழுமத்தின் அல்லது அறிவுரை ஆயத்தின் அமைப்பில் காலியிடம் அல்லது குறைபாடு எதுவும் இருப்பதன் காரணத்தினால் மட்டுமே, செல்லாநிலையதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

குழுமத்தின் மற்றும் அறிவுரை ஆயங்களின் உறுப்பினர்கள் அரசுப்பணி யாளர்களாக இருப்பர்.

7 (உ). தீர்ப்பாயத்தின், குழுமத்தின் மற்றும் அறிவுரைஆயம் எதனின் உறுப்பினர்கள் அனைவரும், இந்தச் சட்டத்தின் வகையங்களில் எதனையும் ஒட்டி செயற்படும்போது அல்லது செயற்படுவதாகப் புலப்படும்போது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (45/1860) பிரிவு 21 இன் பொருளின்படி அரசுப் பணியாளர்களாகக் கொள்ளப்படுவர்.

சட்ட நடவடிக்கை களுக்குத் தடை.

7 (ஊ). இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எதனைப் பொறுத்தும், மைய அரசாங்கம், தீர்ப்பாயம், குழுமம், அறிவுரைஆயம், இவற்றிற்கு அல்லது, நேர்வுக்கேற்ப, மைய அரசாங்கத்தின் தீர்ப்பாயத்தின், குழுமத்தின் அல்லது அறிவுரைஆயத்தின் அலுவலர் அல்லது உறுப்பினர் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடருதல் ஆகாது.

விதிகளைச் செய்வதற்கு அதிகாரம்.

8. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தப் பகுதியின் வகையங்களைச் செயற்படுத்தும் நோக்கங்களுக்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், இந்தப் பிரிவின்படி விதிகள் செய்யப்பட்ட பின்பு,—

(அ) குழுமத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கத்தக்க படித்தொகைகளுக்கு அல்லது கட்டணங்களுக்கு,

(ஆ) குழுமத்தின் உறுப்பினர்களின் பணிவரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளுக்கு,

(இ) உறுதிச்சான்றிற்காக குழுமத்திற்கு விண்ணப்பம் ஒன்று செய்யும் முறை மற்றும் திரைப்படம் ஒன்று குழுமத்தால் ஆய்வு செய்யப்படவேண்டிய முறை, அதற்காக விதிக்கப்படவேண்டிய கட்டணங்கள் இவற்றுக்கு,

(ஈ) திரைப்படங்களின் ஆய்வில் மண்டலஅலுவலர்கள் ஒன்று சேர்தல் மற்றும் எந்த வரைக்கட்டுகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு மண்டல அலுவலர்கள் பிரிவு 7(ஆ)வின்படி தற்காலிக உறுதிச் சான்று வழங்குதல் அத்தகைய உறுதிச்சான்றுகளின் செல்லுந்தன்மை கால அளவு இவற்றுக்கு,

(உ) குழுமம், திரைப்படம் எதனைப் பொறுத்தும் அறிவுரை ஆயத்துடன் கலந்தாய்வு செய்யும் முறைக்கு,

(ஊ) அறிவுரை ஆயத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கத்தக்க படித் தொகைகளுக்கு அல்லது கட்டணங்களுக்கு,

(எ) திரைப்படங்களில் இடும் அடையாளக்குறிகளுக்கு,

(ஏ) தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களுக்கு வழங்கத்தக்க படித்தொகைகளுக்கு அல்லது கட்டணங்களுக்கு,

(ஐ) தீர்ப்பாயத்தின் செயலாளர் மற்றும் பிற பணிபுரிபவர்களின் அதிகாரங்கள், கடமைகள் இவற்றுக்கு,

(ஒ) தீர்ப்பாயத்தின் தலைவர் உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் பிற பணிபுரிபவர்கள் ஆகியவர்களின் பிற பணிவரையுரைகளுக்கும், வரைக்கட்டுகளுக்கும்,

(ஓ) மேல்முறையீடு ஒன்று பொறுத்து தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீட்டாளரால் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களுக்கு,

(ஔ) (பொதுவாக திரைப்படங்களின் நீளம் அல்லது குறிப்பாக, திரைப்படங்களின் வகை எதுவும் தொடர்பான வரைக்கட்டுகள் உள்ளடங்கலாக) எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு உறுதிச்சான்று வழங்கப்படலாகுமோ அந்த வரைக்கட்டுகளுக்கு அல்லது எந்தச் சூழ்நிலைகளில் உறுதிச்சான்று எதுவும் மறுக்கப்பட வேண்டுமோ அந்தச் சூழ்நிலைகளுக்கு,

(க) வகுத்துரைக்கப்படவேண்டியவாறு அல்லது வகுத்துரைக்கப் படலாகுமாறு வேண்டப்படுகிற பிற பொருட்பாடு எதற்கும்

வகைசெய்யலாம்.

(3) இந்தப் பகுதியின்படி மைய அரசாங்கத்தால் வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக்கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில், அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும், அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

விலக்களிப்பதற்குள்ள அதிகாரம்.

9. மைய அரசாங்கம், எழுத்து வடிவிலான ஆணையின் மூலம், அது விதிக்கும் வரைக்கட்டுகள் மற்றும் வரையறைகள், எவையேனுமிருப்பின், அவற்றுக்கு உட்பட்டு, இந்தப் பகுதியின் அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதிகள் எவற்றின் வகையங்களில் எதிலிருந்தும் திரைப்படம் எதனையும் அல்லது திரைப்படங்களின் வகை எதனையும் திரையிட்டுக் காட்டுவதற்கு விலக்களிக்கலாம்.

## பகுதி III

### திரைப்படக்கருவிகள் வாயிலாகத் திரையிட்டுக் காட்டுவதை ஒழுங்குமுறைப்படுத்துதல்

திரைப்படத்தை திரையிட்டுக் காட்டுவதற்கு உரிமம் வழங்கப்படுதல் வேண்டும்.

10. இந்தப் பகுதியில் பிறவாறாக வகைசெய்யப்பட்டவாறல்லாமல், எவர் ஒருவரும், இந்தப் பகுதியின்படி உரிமம் வழங்கப்பட்ட இடம் அல்லாத வேறோரிடத்தில் அல்லது அத்தகைய உரிமத்தால் விதிக்கப்பட்ட வரைக்கட்டுகள் மற்றும் வரையறைகள் எவற்றுக்கும் இணங்கியவாறு அல்லாமல் பிறவாறாக திரைப்படம் வாயிலாக திரையிட்டுக்காட்டுதல் ஆகாது.

உரிமம் வழங்கும் அதிகார அமைப்பு.

11. இந்தப் பகுதியின்படி உரிமங்கள் வழங்குவதற்கு அதிகாரம் உடைய (இதன் பின்பு உரிமம் வழங்கும் அதிகாரஅமைப்பு என்று குறிப்பிடப்படுகிற) அதிகார அமைப்பாக மாவட்டக் குற்றவியல் நடுவர் இருப்பார்:

வரம்புரையாக: மாநில அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, ஒன்றியத்து ஆட்சிநிலவரை முழுவதற்கும் அல்லது அதன்பகுதி எதற்கும் இந்தப் பகுதியின் நோக்கங்களுக்கான உரிமம் வழங்கும் அதிகாரஅமைப்பாக அறிவிக்கையில் குறித்துரைக்கலாகும் பிற அதிகார அமைப்பை அமைக்கலாம்.

உரிமம் வழங்கும் அதிகார அமைப்பின் அதிகாரங்களின் மீதான வரையறைகள்.

12. (1) உரிமம் வழங்கும் அதிகாரஅமைப்பு,—

(அ) இந்தப் பகுதியின்படி வகுக்கப்பட்ட விதிகளுக்குக் கணிசமான அளவு இணங்கி நடந்துள்ளது என்று,

(ஆ) எந்த இடத்தைப் பொறுத்து உரிமம் வழங்கப்பட வேண்டுமோ அந்த இடத்தில், திரையிட்டுக்காட்டுதலுக்கு வருகிற ஆட்களின் பாதுகாப்பிற்காக வகைசெய்வதற்கு அதில் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று

தெளிவுறக் கண்டாலன்றி, இந்தப் பகுதியின்படி உரிமம் வழங்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின் மேலேகண்ட வகையங்களுக்கும், மாநில அரசாங்கத்தின் கட்டாளுகைக்கும் உட்பட்டு, உரிமம் வழங்கும் அதிகாரஅமைப்பு, அந்த அதிகாரஅமைப்பு தக்கதெனக் கருதும் ஆட்களுக்கு, மற்றும் அது தீர்மானிக்கும் வரையுரைகளின் மற்றும் வரைக்கட்டுகளின் பேரிலும், வரையறைகளுக்கு உட்பட்டும், இந்தப் பகுதியின்படி உரிமங்களை வழங்கலாம்.

(3) இந்தப் பகுதியின்படி உரிமம் வழங்குவதற்கு மறுக்கிற உரிமம் வழங்கும் அதிகாரஅமைப்பின் முடிவினால் குறையுற்ற ஆள் எவரும், வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள், மாநில அரசாங்கத்திற்கு அல்லது மாநில அரசாங்கம் இதன் பொருட்டு குறித்துரைக்கலாகும் அலுவலருக்கு மேல்முறையீடு செய்யலாம், மற்றும் மாநில அரசாங்கம் அல்லது, நேர்வுக்கேற்ப, அலுவலர், அது அல்லது அவர் தக்கதெனக் கருதும் நேர்வில், ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(4) மைய அரசாங்கம், திரைப்படம் அல்லது திரைப்படங்களின் வகை எதனையும் திரையிட்டுக்காட்டுதலை, அறிவியல் திரைப்படங்களை, கல்வி நோக்கங்களுக்கான திரைப்படங்களை செய்திகள் மற்றும் நடப்பிலுள்ள நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய திரைப்படங்களை, உண்மை நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் திரைப்படங்களை அல்லது நாட்டு பழங்குடி சார்ந்த திரைப்படங்களைத் திரையிட்டுக்காட்டுவதற்குப் போதுமான வாய்ப்பு கிடைக்கச் செய்துள்ளது என்று, ஒழுங்குமுறைப் படுத்தும் நோக்கத்திற்காக, பொதுவாக உரிமம் பெறுபவர்களுக்கு அல்லது குறிப்பாக உரிமம் பெறுபவர் எவருக்கும் பணிப்புரைகளை அவ்வப்போது வழங்கலாம், மற்றும் அத்தகைய பணிப்புரைகள் வழங்கப்பட்டிருக்குமிடத்து, அந்தப் பணிப்புரைகள் எந்தக் கூடுதல் வரைக்கட்டுகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு, உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்தக் கூடுதல் வரைக்கட்டுகளாகவும், வரையறைகளாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

குறித்தசில நேர்வுகளில் திரைப் படங்களைத் திரையிட்டுக் காட்டுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு மைய அரசாங்கத் திற்குள்ள அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பிற் குள்ள அதிகாரம்.

13. (1) ஒன்றியத்து ஆட்சிநிலவரை முழுவதையும் அல்லது அதன் பகுதி எதையும் பொறுத்துத் துணைநிலை ஆளுநர் அல்லது, நேர்வுக்கேற்ப, தலைமை ஆணையர், மற்றும் தம்முடைய அதிகாரவரம்பிற்குள் மாவட்டத்தைப் பொறுத்து மாவட்டக் குற்றவியல் நடுவர், பொதுமக்களுக்குத் திரையிட்டுக்காட்டப்படும் திரைப்படம் எதுவும், பெரும்பாலும் அமைதிக்குலைவை உண்டாக்கும் என்று அவர் கருதுவாராயின், ஆணை வாயிலாக, திரைப்படத்தைத் திரையிட்டுக்காட்டுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம், மற்றும் அத்தகைய தற்காலிக நிறுத்தி வைப்பின்போது, அந்தத் திரைப்படம், நேர்வுக்கேற்ப, மாநிலத்தில், பகுதியில் அல்லது மாவட்டத்தில் உறுதிச் சான்றளிக்கப்படாத திரைப்படமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படியான ஆணை ஒன்று, தலைமை ஆணையரால் அல்லது, நேர்வுக்கேற்ப மாவட்டக் குற்றவியல் நடுவரால் பிறப்பிக்கப்பட்டுள்ள விடத்து, அதன் படியொன்று, அதற்கான காரணங்களின் விவர உரையுடன் சேர்த்து, மைய அரசாங்கத்திற்கு அதைத் தயார் செய்த ஆளால் உடனடியாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் மைய அரசாங்கம், ஒன்று ஆணையை உறுதி செய்யலாம் அல்லது நீக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி இடப்பட்ட ஆணை ஒன்று, அதன் தேதியிலிருந்து இரண்டு மாதக் காலஅளவிற்குச் செல்லாற்றலில் இருத்தல் வேண்டும். ஆனால் மைய அரசாங்கம், அந்த ஆணை தொடர்ந்து செல்லாற்றலில் இருக்க வேண்டுமென்று கருதுமாயின், அது பொருத்தமெனக் கருதும் மேலுமான கால அளவிற்கு, அந்தத் தற்காலிக நிறுத்தி வைப்புக் கால அளவு நீட்டிக்கப்படுதல் வேண்டுமென்று பணிக்கலாம்.

இந்தப் பகுதியை மீறியதற்கான தண்டனைகள்.

14. இந்தப் பகுதியில் அல்லது அதன்படி வகுக்கப்பட்ட விதிகளின் வகையங்களுக்கு அல்லது இந்தப் பகுதியின்படி எந்த வரைக்கட்டுகள் மற்றும் வரையறைகளின்பேரில் அல்லது அவற்றுக்கு உட்பட்டு உரிமம் எதுவும் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வரைக்கட்டுகள் மற்றும் வரையறைகளை மீறியதற்கான, திரைப்படத்தின் உரிமையாளர் அல்லது அதைப் பொறுப்பில் கொண்டுள்ள ஆள் அதைப் பயன்படுத்துவாராயின், அல்லது அது பயன்படுத்தப்பட அனுமதிப்பாராயின் அல்லது இடம் எதனின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிப்பாராயின், அவர், ஆயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்தும், தொடர்ச்சியான குற்றம் ஒன்றைப் பொறுத்தவரை, அந்தக் குற்றம் தொடருகிற நாள் ஒவ்வொன்றுக்கும், நூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் மேலுமான பணத்தண்டம் விதித்தும் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

உரிமத்தை முறித்தறவு செய்வதற்கான அதிகாரம்.

15. உரிமம் வைத்திருப்பவருக்கு, பிரிவு 7இன் அல்லது பிரிவு 14 இன் படியான குற்றச்செயல் ஒன்றிற்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த உரிமம், உரிமம் வழங்கும் அதிகாரஅமைப்பினால் முறித்தறவு செய்யப்படலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

16.(1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக,—

(அ) இந்தப் பகுதியின்படி, எந்த வரையறைகள், வரைக்கட்டுகள் மற்றும் வரையீறைகளுக்கு உட்பட்டு, உரிமம் வழங்கப்படலாகுமோ அந்த வரையறைகள், வரைக்கட்டுகள் மற்றும் வரையறைகள் எவையேனுமிருப்பின், அவற்றை வகுத்துரைக்கும்.

(ஆ) பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கச்செய்வதற்காக திரைப்படக்கருவிகள் வாயிலாகத் திரையிட்டுக்காட்டுவதை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு வகை செய்யும்,

(இ) எந்தக் காலஅளவிற்குள், மற்றும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, பிரிவு 12 இன் உட்பிரிவு (3)இன்படி மேல்முறையீடு ஒன்று முன்கொணரப்படலாகுமோ அந்தக் கால அளவு மற்றும் வரைக்கட்டுகளை வகுத்துரைக்கும்

விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தப் பகுதியின்படி மைய அரசாங்கத்தால் வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில் அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அதன்பின்பு, அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது, நேர்வுக்கேற்ப,செல்திறம் இல்லாது போகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

17. மைய அரசாங்கம், எழுத்துவடிவிலான ஆணை மூலம், அது விதிக்கும் வரைக்கட்டுகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு, இந்தப் பகுதியின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எவற்றின் வகையங்கள் எதிலிருந்தும், திரைப்படக்கருவியின் வாயிலான திரைக்காட்சி அல்லது திரைப்படக்கருவியின் வாயிலான திரைக்காட்சிகளின் வகை எவற்றுக்கும் விலக்களிக்கலாம். விலக்களிப்பதற்குள்ள அதிகாரம்.

## பகுதி IV

### *நீக்கறவு*

18. திரைப்படச் சட்டம், 1918 (2/1918) ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது: நீக்கறவு.

வரம்புரையாக: பகுதி (அ) மாநிலங்கள் மற்றும் பகுதி (ஆ) மாநிலங்கள் தொடர்பாக, அந்த நீக்கறவு, சொல்லப்பட்ட சட்டம் திரைப்படச் சுருள்களைத் திரையிட்டுக் காட்டுவதற்கு ஒப்பளிப்பது தொடர்பாக இருக்குமளவுக்கு மட்டுமே செல்திறம் பெறும்.